[1975 நவம்பர் 12

*310 வினா—திரு. கி. செயராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் நகரத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் குடிநீர் விநியோகத் திட்டம் எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சேலம் நகரத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் குடிநீர் வினியோக வளர்ச்சித் திட்டம் மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டு முதல் நிலைப் பணியாகக் குழாய்கள் இரடிப்பு செய்யும் வேலை முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலையில், கூடுதல் தெளிநீர் தேக்கத் தொட்டி கட்டும் வேலையும் முடிவு பெற்றுள்ளது. சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் வேலையில் ஏறக்குறைய 75 சதவிகிதம் முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. மூன்றும் நிலையாக நீர் ஏற்றும் இயந்திரங்கள் நிறுவும் வேலைக்கு நீர் ஏற்று இயந்திரங்கள் வாங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பெற்றுள்ளது. இயந்திரங்கள் வந்ததும், வேலை விரைவாக மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

திரு. அ. ஆறுமுகம்: தலைவரவர்களே, சேலம் நகரத்திற்குக் குடிநீர் பற்றுக்குறை இருக்கிறது. இப்பொழுது காவிரியிலிருந்து சேலம் நகருக்குத் தண்ணீர் எடுத்து வரப்படுகிறது. அது போதுமானதாக இல்லை. அதை விரைவுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தத் திட்டமே இப்பொழுது முடியப் போகிறது. முடிந்தால் சேலத்தினுடைய தேவை நிறைவேறிவிடும்.

*311 வினா—திரு. வ. முத்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், சங்ககிரி நகரப் பகுதிக்கு காவிரியிலிருந்து குடிநீர் வழங்கப்படுவதற்கான திட்டம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.